# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.845/2022
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-4 |
| Name | : Daniel |
| Father/Husband's Name | : Dominic (HC) |
| Village | : Walajabad |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2025.

Accused absent petition filed online.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சைபர் கிரைம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். சாட்சியிடம் இவ்வழக்கில் பார்வை மகசர் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்று கூறுகிறார். அந்த **கையொப்பம் மட்டும் அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையொப்பத்தை 29.05.2022 அன்று பகல் 01.00 மணியளவில் இவ்வழக்கு சம்பவ இடமான திருமதி.வனஜா அவர்களின் வீட்டிலுள்ள படுக்கை அறையில் wifi moderm வைக்கபட்டிருந்த இடத்தில் ஆய்வாளர் பார்வை மகசரை தயார் செய்தபோது நான் கையொப்பம் போட்டேன். பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் நானும், என்னுடன் இருந்த தலைமை காவலர் சிவா என்பவரும் கையொப்பமிட்டோம். மேலும் அந்த இடத்தில் ஆய்வாளர் அவர்கள் மாதிரி வரைபடம் குற்ற எண்.18/2022 வழக்கில் தயார் செய்தார். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை –**

சம்பவ இடமான திருமதி.வனஜா அவர்களின் வீட்டிலுள்ள படுக்கை அறையில் wifi moderm வைக்கபட்டிருந்த இடத்தில் ஆய்வாளர் பார்வை மகசர் தயார் செய்தபோது நான் கையொப்பம் போட்டேன் என்ற விவரத்தை ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது கூறினேனா என்றால் கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லையென்றாலும் தற்போது அரசு தரப்பில் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகசர் தயார் செய்யும்போது நான் சம்பவயிடம் சென்றதற்கு எனக்கு பாஸ்போர்ட் வழங்கப்பட்டதா என்றால் பாஸ்போர்ட் கொடுக்கவில்லை, ஆய்வாளருடன் சென்றதால் என்னுடைய நோட்டு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்திற்கு அந்த நோட்டு புத்தகத்தை வரவழைத்து பார்த்தால் உண்மை விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். சம்பவயிடம் எத்தனை அடுக்கு மாடி என்றால் தரைத்தளம் மட்டும்தான் உள்ளது. கல்பாக்கத்தில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடமான கல்பாக்கத்திலுள்ள quarters ல் பாதுகாப்பு பணிக்காக CISF போலிசார் பணியிலிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் வந்து செல்பவர்களை கண்காணிப்பதற்கு CCTV camera பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை பார்த்தால் நான் உண்மையில் சம்பவயிடம் சென்றேனா வரைபடம் வரையப்பட்டதா என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னார் சரிதான். நான் சொல்வது போல சொன்ன தேதியில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லையென்றாலும் என் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்யப்படவில்லையென்றாலும் மேற்படி பார்வை மகசர் வரைபடம் 09.11.2022 அன்று காவல் நிலையத்தில் வைத்து ஆய்வாளரால் வழக்கிற்கு ஏற்றார்போல் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் ஆய்வாளருக்கு அனுசரித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

(SD/-)V.LAVANYA
Judicial Magistrate No.I,
Chengalpattu.